**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 166 /2022 PW1**

18.02.2025 **வா.சா.1 பாக்கியலட்சுமி சத்திய வாக்குமூலத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி-**

வழக்கு சொத்து என் மாமனார் நீலகவுண்டர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி நீலகவுண்டர் 2000ல் தனது மனைவி தெய்வாணை என்பவரும் சேர்ந்து ரூ. 66 ஆயிரத்தை பாடலி என்பவரிடம் அடமானக் கடன் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த கடன் திருப்பப்பட்டு விட்டதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பிறகு என் மாமனார் 18.10.2005ல் ராஜசேகரன் என்பவரிடம் கிரைய உடன்படிக்கை செய்து முன்பணம் பெற்றார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த உடன்படிக்கை 3 ஆண்டுகளுக்கு போடப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த உடன்படிக்கை ரத்து செய்யப்பட்டதா என்றால் அது பற்றியும் எனக்கு தெரியாது. மேற்படி அடமானக் கடன் மற்றும் கிரைய உடன்படிக்கை முன்பணம் ஆகியவற்றை நீலகவுண்டரின் 3 மகன்கள் அடைத்து விட்டார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. நீலகவுண்டரின் மூத்த மகன் ரங்கநாதன் என்றால் சரிதான். ரங்கநாதனின் முதல் மனைவி உமாவிற்கு 3 மகன்கள், 1 மகள் என்றால் சரிதான். ரங்கநாதனின் முதல் மனைவி இறந்த பிறகு நான் அவரை திருமணம் செய்தேன். எனக்கும், ரங்கநாதனுக்கும் சுந்தர், மகேஸ்வரி என இரண்டு குழந்தைகள் பிறந்தார்கள். மேற்படி கடன்களை என் கணவர் முன்நின்று பைசல் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 22.10.2007ல் எனது மாமனார் ஒரு தான செட்டில்மெண்ட் என் கணவர் பெயருக்கு எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல, ஆனால் ரங்கநாதனின் மூத்த மனைவி மற்றும் இரண்டாவது மனைவியின் பிள்ளைகளுக்கு எழுதி வைத்தார். அவ்வாறு எழுதி வைத்தது எனக்கு நேரடியாக தெரியாது, ஆனால் பத்திரத்தை பார்த்து தெரிந்து கொண்டேன். மேற்படி தான செட்டில்மெண்ட பத்திரத்தில் சாட்சி கையொப்பம் போட்டவர்கள் தற்போது இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சாட்சி கையொப்பம் போடும் போது நான் உடன் இல்லை. எனது மாமனார் மேற்படி 22.10.2007ல் எழுதிய தான பத்திரத்தை பிறகு 02.11.2007ல் ரத்து செய்து விட்டார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 3, 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். மேற்படி அவர்களது எதிர் வழக்குரையில் என் மாமனார் எழுதி வைத்த தான செட்டில் மெண்ட் பத்திரத்தை 02.11.2007ல் ரத்து செய்து விட்டதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. தான பத்திரத்தை எனது கணவர் ஏமாற்றி வாங்கி

விட்டார் என்றும், பிறகு அது தெரிந்த எனது மாமனார் 02.11.2007ல் அந்த தான பத்திரத்தை ரத்து செய்து விட்டார் என்றும் சொன்னால் சரியல்ல. எனது மாமனார் இருந்த வரை அந்த வீட்டை அனுபவித்து வந்தார் என்றால் எனது மாமனாரும் நாங்களும் சேர்ந்து அனுபவித்து வந்தோம். இப்போழுதும் அனுபவித்து வருகிறோம். எனது பெயரில் வீட்டின் ஆவணங்கள் இருப்பதற்கான பட்டா தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவர் எழுதி வைத்த தான பத்திரத்தில் சம்மந்தப்பட்ட சொத்தை அவர் சுவாதீனம் யாருக்கும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மாமனார் 05.11.2007ல் 3ல் 2 பாக சொத்தை நீலகவுண்டரின் 3வது மகன் ராஜகுமாருக்கும், 3ல் ஒரு பாக சொத்தை எனது கணவரின் முதல் மனைவியின் மகள் சுவர்ணலட்சுமிக்கும் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி முதலில் எழுதி வைத்த தான பத்திரத்தை ரத்து செய்து விட்டு பின்னிட்டு தான பத்திரத்தை முதன் மனைவியின் மகளுக்கும், ராஜ குமாருக்கும் எழுதி வைத்ததால் நீலகவுண்டரின் இரண்டாவது மகன் நடராஜன் நீலகவுண்டரிடம் போய் தனக்கு ஏன் சொத்து எழுதி வைக்கவில்லை என்று நியாயம் கேட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.